வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—ரோஷ்ணாகாசிம்

தேதி 05.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி புதுடெல்லியில் இன்று 12 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

எந்த ஒரு நாட்டு மக்களும், அந்நாட்டின் மீது ஆழ்ந்த ஈடுபாடு காட்டாத வரையில் அந்நாடு வளர முடியாது என்ற குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் கூறியுள்ளார்.

பாதுகாப்பு நடவடிக்கைகளில் விரைவில் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

ஏனாமில் நடைபெறும் மலர்-காய்-கனி கண்காட்சியை புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி நாளை மாலை திறந்து வைக்க உள்ளார்.

மோடி 1 (18)

டெல்லியில் 12 ஆயிரத்து 200 கோடி ரூபாய்மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அடிக்கல் நாட்டினார். டெல்லி-காசியாபாத் -மீரட் நமோ பாரத் வழி தடத்தின் சாஹிபாபாத் மற்றும் நியூ அசோக் நகர் இடையே சுமார் 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான 12 கிலோ மீட்டர் வழி தடத்தையும் அவர் திறந்து வைத்தார். சாஹிபாபாத்-ஆர்ஆர்டிஎஸ் நிலையத்தில் இருந்து, நியூ அசோக் நகர் ஆர்ஆர்டிஎஸ் நிலையத்திற்கு நமோ பாரத் ரயிலில் பிரதமர் பயணம் செய்து, பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடினார். மேலும், ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பில் ஜனக்புரி மற்றும் கிருஷ்ணாபார்க் இடையே 2.8 கிலோ மீட்டர் தூரம் கொண்ட டெல்லி மெட்ரோ 4 ஆம் கட்டத்தையும் பிரதமர் இன்று திறந்து வைத்தார். தொடர்ந்து மேற்கு டெல்லியின் கிருஷ்ணாபார்க் விகாஸ்புரியின் சில பகுதிகள், ஜனக்புரியின் சில பகுதிகள் இந்த புதிய பாதையால் பயனடையும். மேலும், சுமார் 6 ஆயிரத்து 230 கோடி ரூபாய் மதிப்பிலான டெல்லி மெட்ரோ 4 ஆம் கட்டத்தின் ரிதாலா-குண்ட்லி பிரிவுக்கான அடிக்கலையும் பிரதமர் இன்று நாட்டினார். புதுடெல்லியின் ரோகினியின் மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்திற்கான புதிய அதிநவீன கட்டிடத்திற்கும் பிரதமர் இன்று அடிக்கல் நாட்டினார். இந்த வளாகம் அதிநவீன சுகாதார மற்றும் மருத்துவ

மோடி 2 (9)

உட்கட்டமைப்பை வழங்கும். இத்திட்டத்தின் துவக்கமானது பிராந்திய இணைப்பை மேம்படுத்தவும், டெல்லி மக்களின் பயணத்தை எளிதாக்கவும் உதவும். பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்று பேசிய பிரதமர், டெல்லியின் வளர்ச்சிக்கு அடுத்த 25 ஆண்டுகள் முக்கியமானது என்றும், இந்த 25 ஆண்டுகளில் இந்தியா வளர்ந்த நாடாக மாறும் என்றும் கூறினார். வளர்ச்சியடைந்த இந்தியாவின் தேசிய தலைநகராக டெல்லியை மேம்படுத்த பிரதமர் வலியுறுத்தினார். டெல்லி நகரத்தின் பிரகாசமான எதிர்காலத்திற்காக டெல்லி மக்கள் பாஜக விற்கு சேவை செய்ய வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

தன்கர் (12)

எந்த ஒரு நாட்டு மக்களும், அந்நாட்டின் மீது ஆழ்ந்த ஈடுபாடு காட்டாத வரையில் அந்நாடு வளர முடியாது என்ற குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் கூறியுள்ளார். டெல்லியில் நடைபெற்ற என்சிசி குடியரசு தின முகாமை பார்வையிட வந்த அவர், இந்தியாவின் வளர்ச்சிக்கு தேசிய வாதம் அமைப்பு மற்றும் தேசத்தின் முதல் அணுகுமுறை தேவை என்று கூறினார். நாட்டின் மாற்றம், சமூக நல்லிணக்கம், குடிமை கடமைகள், தேசபக்தி, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, தன்னம்பிக்கை ஆகிய

ஐந்தும் அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். இந்தியாவை சிறந்த ஒழுக்கம் மற்றும் பெருமைமிக்க நாடாக மாற்ற இந்த 5 தூண்களையும் பின்பற்றுமாறு அவர் மக்களையும், இளைஞர்களையும் கேட்டுக் கொண்டார். ஒவ்வொரு இளைஞர்களுக்கும் தங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

*அமித்ஷா* (10)

பாதுகாப்பு நடவடிக்கைகளில் விரைவில் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார். முன்னாள் மத்திய அமைச்சர் சுஷ்மாசுவராஜின் நினைவாக புதுடெல்லியில் அமைக்கப்பட்டுள்ள பணிக்கு செல்லும் மகளிரக்கான பிரத்யேக விடுதியை அவர் திறந்து வைத்தார். தேசிய ஸ்மார்ட் நகர திட்டத்தின் கீழ் இந்தியாவின் கிராமங்களை நகரமாக மாற்றுவதை அவர் எடுத்துரைத்தார். பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பேசிய அவர், நாட்டின் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய பல நகரங்களில் சிசிடிவி கேமராக்களுடன் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

*சிவராஜ் சிங் (13)*

விவசாயிகளுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையேயான விலை இடைவெளியை குறைக்க ஏதுவாக போக்குவரத்து மற்றும் சேமிப்பு செலவை அரசே ஏற்கும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நேற்று நடைபெற்ற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் விவசாய அமைச்சர்களுடனான மறு ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், இந்தாண்டு விவசாய துறை மற்றும் அதனை சார்ந்த துறைகளின் வளர்ச்சி விகிதம் 3.5 சதவிகிதம் முதல், 4 சதவிகிதம் வரை இருக்கும் என்றும் தெரிவித்தார். பிரதமரின் கிசான் திட்டத்தின் கீழ், 11 கோடி விவசாயிகளுக்கு, 18 தவணைகளில் சுமார் 3.46 லட்சம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ரசாயண உரங்களின் பயன்பாட்டால் பூமிக்கு ஏற்படும் சேதம் காரணமாக, இயற்கை விவசாய பணியை ஊக்குவிக்க விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

*அர்ஜுன் ராம் மெக்வால் (11)*

டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, புதுச்சேரி இந்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்துடன் இணைந்து, மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்காக

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019 குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. இதன் நிறைவு விழா இன்று தனியார் ஓட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு, ஆந்திரா, தெலங்கானா, புதுச்சேரி மற்றும அந்தமான் நிகோபார் தீவுகளில் இருந்து தலைவர்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் பங்கேற்றார். அப்போது பேசிய அவர்

(வாய்ஸ்)

*நிதின் கட்கரி* (9)

தமிழகத்தில் 15 மேம்பாலங்கள் மற்றும் இருவழிப் பாதை பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார். திருவண்ணாமலை, ராமநாதபுரம், விழுப்புரம், திருப்பூர், சிவகங்கை, புதுக்கோட்டை, அரியலூர், ஈரோடு, மதுரை உள்ளிட்ட 9 மாவட்டங்களில் 22 க்கும் மேற்பட்ட பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். நெடுஞ்சாலைகளில் சாலை புனரமைப்பு, சாலைகளை அகலப்படுத்துதல், உள்ளிட்ட பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

*தேசிய பாதுகாப்பு ஆலோசகர்* (8)

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு ஜேக் சல்லிவன் 2 நாள் அரசு முறை பயணமாக இன்று புதுடெல்லி வந்துள்ளார். அவர் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவலை சந்தித்து அவருடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். பசிபிக் பிராந்தியம், விண்வெளி பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிப்பார் என எதிர்பார்க்கப் படுகிறது. திரு ஜேக் சல்லிவன் தமது பயணத்தின் போது வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கள் மற்றும் இதர தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

*குமாரசாமி* (8)

மத்திய எஃகு மற்றும் கனரக தொழில்துறை அமைச்சர் திரு எச் பி குமாரசாமி நாளை புதுடெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் பிஎல்ஐ திட்டத்தின் கீழ், 1.1 ஐ அறிமுகப்படுத்தி திறந்து வைக்க உள்ளார். எஃகு அமைச்சகத்தின் கீழ் உள்ள பிஎல்ஐ 27 ஆயிரத்து 106 கோடி ரூபாய் முதலீடு செய்து 14 ஆயிரத்து 760 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு மற்றும் 7.90 மில்லியன் டன் இரும்பு உற்பத்தி செய்துள்ளது. கடந்த ஆண்டு இந்த நிறுவனம் 18 ஆயிரத்து 300 கோடி முதலீடு செய்து, 8 ஆயிரத்து 260 பேருக்கு வேலை வாய்ப்பை அளித்துள்ளது.

*மலர் கண்காட்சி* (6)

புதுவை பகுதி ஏனாமில் நாளை மாலை நடைபெற உள்ள 23 ஆவது மலர்-காய்-கனி கண்காட்சியை புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி திறந்து வைக்க உள்ளார். இதனை ஒட்டி இன்று கண்காட்சிக்கான ஏற்பாடுகளை புதுச்சேரி வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் திரு ஜெயக்குமார், டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு மல்லாடி கிருஷ்ணாராவுடன் இணைந்து ஆய்வு மேற்கொண்டார்.

*போர்க் கப்பல்* (11)

பிரெஞ்ச் கடற்படை விமானம் தாங்கி போர்க் கப்பலான சார்லஸ் டி-கோல் நேற்று கோவாவின் மோர்முகாவ் துறைமுகம் வந்து சேர்ந்தது. இந்திய கடற்படை அதிகாரிகள் சம்பிரதாய முறைப்படி, கடற்படை இசைக்குழுவினருடன் போர்க் கப்பலை வரவேற்றனர். இந்தியா-பிரான்ஸ் இடையே வருடாந்திர போர் பயிற்சி முகாமிற்காக இந்தியா வந்துள்ள இந்த போர்க் கப்பல் பின்னர் இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளுடன் தொடர்ச்சியாக பயிற்சியில் ஈடுபட உள்ளது. தொடர்ந்து பசிபிக் பெருங்கடல் திரும்பும் என்றும், இந்தியாவிற்கான பிரெஞ்ச் தூதரகம் தெரிவித்துள்ளது. பிரான்ஸ் போர்க் கப்பல் வருகை இந்தியா மற்றும் பிரான்ஸ் கடற்படை வீரர்களுக்கு இடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் என்றும் இந்திய கடற்படை தமது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளது.

யோகா திருவிழா (20)

பரபரப்பான மக்களின் வாழ்க்கை முறையில் பல்வேறு வகையான நோய்களை எதிர்கொள்ள யோகா அவசியம் என்று புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார். அவர் நேற்று புதுச்சேரியில் நடைபெற்ற 30 வது சர்வதேச யோகா தின விழாவில் பங்கேற்று பேசினார். இந்நிகழ்ச்சியில் வெளிநாடுகள் மற்றும் பல்வேறு மாநிலங்களில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு யோகாசன பயிற்ச்சியில் ஈடுபட்டனர். இந்நிகழ்ச்சியில் பேசிய புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி, உடலை தன்னிலைப்படுத்தி ஆரோக்கியமாக வாழ யோகா அவசியம் என்று தெரிவித்தார். புதுச்சேரியில் பாதுகாப்பு இருப்பதால் தான் சுற்றுலா பயணிகள் அதிகம் வருவதாக அவர் கூறினார். மேலும், புதுச்சேரி கடலின் அழகை சுற்றுலா பயணிகள் ரசிக்கும் வண்ணம் கடற்கரை ஓரத்தில் பாலங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். பழைய துறைமுக வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், சுற்றுலாத்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். புதுச்சேரியில் ஆண்டுதோறும் நடைபெறும் இந்த யோகா திருவிழா வருகிற 7 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. தினந்தோறும் காலை தியானப் பயிற்சிகள், யோகா தொடர்பான கருத்தரங்கம், சித்தா-ஆயுர்வேதம், ஓமியோபதி மற்றும் இயற்கை மருத்துவ சிகிச்சைகள், கலைநிகழ்ச்சிகள் ஆகியவையும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

வைரஸ் (7)

கடந்த சில வாரங்களாக சீனாவை அச்சுறுத்தி வரும் எச்எம்பி வைரஸ் பரவலை உன்னிப்பாக கவனித்து வருவதாக மத்திய சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது. இது தொடர்பாக எச்எம்பிவி சோதனை செய்யும் ஆய்வகங்களின் எண்ணிக்கையை இந்திய மருத்துவ ஆராய்ச்சி மையத்தால் மேம்படுத்தப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. மக்கள் தற்போதைய நிலைமை குறித்து பீதியடைய வேண்டாம் என மத்திய சுகாதார இயக்குநர் ஜெனரல் டாக்டர் அதுல்கோயல் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் (5)

சிட்னியில் நடைபெற்ற  இந்தியாவிற்கு எதிரான பார்டர் கவாஸ்கர் கோப்பை 5 ஆவது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்று தொடரை கைப்பற்றியது. இதனை தொடர்ந்து, உலக டெஸ்ட் சாம்பியன் பட்ட இறுதி போட்டியில் இருந்து இந்தியா வெளியேறி உள்ளது.